Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 1, 2023

வியாழக்கிழமை ஜூன் 01, 2023 | ஒளி: 09 கதிர் 009 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE



## ஜனாதிபதி விசேட உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு இன்று வியாழக்கிழமை (01) இரவு 8 மணிக்கு விசேட உரையாற்றவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடந்த ஒன்பது மாதங்களில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இலங்கை அரசின் சமூக பொருளாதார அரசியல் சீர்திருத்த வேலைத்திட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் ஜனாதிபதி அறிக்கையொன்றை வெளியிட உள்ளார்.

விசேட அறிக்கையொன்றை விடுத்து நாட்டின் இலக்குகளை அடைவதற்கான செயற்பாட்டுப் பிரேரணையையும் ஜனாதிபதி முன்வைப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு

# சீனா பூரண ஆதரவளிக்கும்



இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சீன அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என்று சீன வெளிவிவகார துணை அமைச்சர் சன் வெய்டாங் வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் சீனா ஆர்வம் காட்டுவதாக சீன துணை அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (30) சந்தித்த போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான காலப்பகுதியில் இலங்கைக்கு சீனாவின் அசைக்க முடியாத ஆதரவிற்கு ஜனாதிபதி, சீன துணைஅமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக்கொள்வதில் சீனாவின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய துணை அமைச்சர், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய சீனா ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 16 வயது மகளை விற்ற தந்தை கைதானார்

### வட்டிக்கு வாங்கிய பணத்துக்கே விற்றுள்ளார்

தன்னுடைய மனைவியையும் இணைத்துக்கொண்டு வீட்டிலேயே நடத்திய சூதாட்டத்தில் விளையாடுவதற்காக வட்டிக்கு பெற்ற பணத்தை ஈடுசெய்வதற்காக, தன்னுடைய மகளையே விற்ற தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைக்குச் செல்லும் 16 வயதான மகளே இவ்வாறு விற்கப்பட்டுள்ளார் என்று அகலவத்த பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மலிவு உணவு வழங்குகையில் பெற்றோரே மிகக் கவனம்

சந்தையில் விற்கப்படும் குளிர்பானங்களில் அதிக சீனி காணப்படுவதால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மலிவான உணவுகளை வழங்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் தொற்றாத நோய்களின் பரவல் அதிகமாக உள்ளதால் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் மலிவான உணவுகள் மற்றும் பானங்களில் போதிய ஊட்டச்சத்து இல்லை என்று சுகாதார அமைச்சின் போஷாக்கு பிரிவு பணிப்பாளரும் விசேட நிபுணருமான டொக்டர் லக்மினி நயன மகோதரத்ன தெரிவித்தார்.

மேலும், பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் போது, சத்தான உணவுகள் விலை உயர்ந்ததாக இருந்தாலும், சந்தையில் குறைந்த விலையில் விற்கப்படும் உணவு வகைகள் உள்ளன.

தொடர்ச்சி P2




## 8 நிறுவனங்களை தண்டிக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை

சட்டவிரோத பிரமிட் திட்டங்களை நடத்தும் எட்டு நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து தண்டிக்குமாறு சட்டமா அதிபரிடம் இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

டையென்ஸ் லங்கா ஹெல்த்கெயார் பிரைவேட் லிமிட்டட், பெஸ்ட் லைஃப் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா பிரைவேட் லிமிடெட், மார்க்-வோ இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், விஎம்எல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்,

தொடர்ச்சி P2



## அக்கரைப்பற்றில் எரிபொருள் வரிசை

■ வி.சுகிர்தகுமார்

எரிபொருளின் விலை புதன்கிழமை (31) நள்ளிரவுடன் குறைவடையலாம் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் வரிசையில் காத்திருந்து எரிபொருளை பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

தொடர்ச்சி P2



## தங்கம் சரிந்தது ரூபாய் உயர்ந்தது

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளதுடன்,

தங்கத்தின் விலை குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் புதன்கிழமை (31) காலை வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 287 ரூபாய் 87 சதமாகவும் விற்பனை விலை 295 ரூபாய் 52 சதமாகவும் பதிவாகியுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 298 ரூபாய் 10 சதமாகவும் விற்பனை விலை 308 ரூபாய் 49 சதமாகவும் பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதாக செட்டியார் தெரு வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2



விவசாயத் துறையின் தரவுகளை

## டிஜிட்டல் மயப்படுத்த அரசாங்கம் அவதானம்

இலங்கையின் விவசாயத்துறை தரவுகளை டிஜிட்டல் மயப்படுத்துவது குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (30) பிற்பகல் நடைபெற்றது.

குறித்த அரச நிறுவன அதிகாரிகளின் பங்களிப்புடன் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விவசாயத் துறையின் நவீனமயமாக்கல், போசாக்கு, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்கையில் தரவு அடிப்படையிலான முடிவுகளை எடுப்பதற்கான அணுகுமுறை தொடர்பில் விரிவாக கலந்துரையாட ப்பட்டதுடன், இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை தொடருமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தொடர்ச்சி P2

## மத்தியிலும் கால்நடை நோய் பரவி வருகிறது

■ மொஹொமட் ஆஸிக்

வடமேல் மாகாணத்தில் கால்நடைகளுக்கு பரவி வரும் தோல் நோய், மத்திய மாகாணத்தில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் பதிவாகியுள்ளதால், அதனை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மருந்து விலைகளை குறைக்க வேண்டும்

### சுகாதார அதிகாரிகளுக்கு அமைச்சர் கெஹலிய பணிப்புரை



மருந்துகளின் விலைகளை குறைந்தது 15 சதவீதத்தால் குறைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, விலைகளைக் குறைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சு, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் மருத்துவ விநியோகப் பிரிவு ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## சட்டவிரோத செயலில் ஈடுபடும் எம்.பிக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### அரசாங்கம் தயங்காது என்கிறார் அமைச்சர் பிரசன்ன

சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது என்றும் கடந்த காலங்களில் பேசப்பட்டு வந்த இவ்வாறான எம்.பிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கை ரூபாய்க்கு விரைவில் கஷ்டகாலம்

இலங்கை அரசாங்கம் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துகின்றமை மற்றும் கடனை திருப்பி செலுத்துவது போன்ற காரணங்களால் இலங்கை ரூபாய்க்கு கடினமான காலங்கள் வருமென ஆய்வாளர்கள் கணித்துள்ளனர் என்று புளூம்பேர் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

மேல் மாகாணத்திலுள்ள

## 4 பண்ணைகளில் பன்றி வைரஸ்

பன்றிகளிடையே பரவி வரும் வைரஸானது மேல் மாகாணத்திலுள்ள 4 பண்ணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தொற்று காணப்படும் பண்ணைகளில் இருந்து பன்றிகளை வெளியே கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே.சரத் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் தொற்று இதற்கு முன்னரும் நாட்டில் பதிவாகியுள்ளதாகவும் இது வேகமாக பரவும் அபாயம் இல்லை எனவும் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2



## யூரியாவின் விலை இனி ரூ.9 ஆயிரம்

அரசுக்கு சொந்தமான உர நிறுவங்களால் விநியோகிக்கப்படும் 50 கிலோ கிராம் நிறை கொண்ட யூரியா மூடை ஒன்றின் விலையை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 9 ஆயிரம் ரூபாயாக குறைக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

யூரியாவின் விலையை குறைப்பது குறித்து புதன்கிழமை (31) காலை இடம்பெற்ற நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளமை மற்றும் உலக சந்தையில் யூரியாவின் விலை வீழ்ச்சியடைந்து வருவதன் நன்மைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## இலங்கை இரத்தினங்களுக்கு தாய்லாந்து சந்தை சிறந்தது

### தாய்லாந்து பிரதமர் ச்சான்–ஓ–ச்சா தெரிவிப்பு

இலங்கையின் இரத்தினக்கற்களை மெருகூட்டுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தாய்லாந்து மிகச்சிறந்த சந்தைய என தாய்லாந்து பிரதமர் ப்ரயுத் ச்சான்-ஓ-ச்சா தெரிவித்தாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தாய்லாந்துக்கு பயணமாகிய பிரதமர் தினேஷ் குணவர்தன, அந்நாட்டு பிரதமர் ஜெனரல் ப்ரயுத் ச்சான்-ஓ-ச்சாவை பேங்கொக் நகரிலுள்ள அரச மாளிகையில் சந்தித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் நிகழ்வை முன்னிட்டு, பிரதமர் உள்ளிட்ட 11 பேர் கொண்ட தூதுக்குழு புதன்கிழமை (31) அதிகாலை தாய்லாந்து பயணமானது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 16 வயது மகளை விற்ற தந்தை...

கலவானை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இந்த வட்டிக்கு பணம் கொடுக்கும் முதலாளி, அச்சிறுமியை ஒருவருடமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

வட்டிக்கு பணம் கொடுக்கும் அந்த முதலாளி, சிறுமிக்கு அலைபேசியையும் வாங்கிக் கொடுத்துள்ளார். அந்த அலைபேசி சின்னம்மாவின் கைகளுக்கு சிக்கியதை அடுத்தே இந்தக் குற்றச்செயல் அம்பலமானது.

அந்த சிறுமி, தன்னுடைய மாமாவினால் இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவமும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சந்தேகநபரான தந்தை, செவ்வாய்க்கிழமை (30) மாலை கைது செய்யப்பட்டுள்ளார். வட்டிக்கு பணம் கொடுக்கும் முதலாளியும் மாமாவும் பிரதேசத்தில் இருந்து தப்பியோடிவிட்டனர்.

இரண்டு பிள்ளைகளின் தாயும் தந்தையும், தன்னுடைய வீட்டுக்குள்ளேயே பல வருடங்களாக சூதாட்டத்தை நடத்தி வந்துள்ளனர்.

இந்த சூதாட்டத்துக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் முதலாளியான கலவானையைச் சேர்ந்த 38 வயதானவர், அவ்வப்போது இந்த வீட்டுக்கு வந்து சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான தந்தை, சூதாடுவதற்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் முதலாளியிடம் பெற்ற பணத்துக்காக தன்னுடைய மகளையே பாலியல் செயற்பாட்டுக்காக வட்டி முதலாளியிடம் அனுப்பிவைத்துள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த குற்றச்செயலுக்காக தாய் எவ்விதமான அனுமதியையும் கொடுக்கவில்லை என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

## 8 நிறுவனங்களை தண்டிக்குமாறு...

ஃபாஸ்ட் 3சைக்கிள் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், ஸ்போட் செயின் அப், ஸ்போட் செய் ஸட்எஸ் சொசைட்டி ஸ்ரீலங்கா மற்றும் ஒன்மெக்ஸ்டிரி ஆகிய நிறுவங்களையே மத்திய வங்கி பெயரிட்டுள்ளது.

**“ இந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது**

1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தின் 83 (இ) பிரிவின் ஷரத்துகளுக்கு முரணாக தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பிக்கும் வழங்கும், ஊக்குவிக்கும், விளம்பரம் செய்யும், நிதி வழங்கும் அல்லது வழிநடத்தும் எந்தவொரு நபரும் தண்டிக்கப்படுவார்.

மேலும், மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத்தண்டனை அல்லது 10 இலட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும் எனவும் வங்கிக் கட்டுப்பாட்டாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய இதுபோன்ற செயல்களில் இருந்து விலகி இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுடன் உடன்பாடுகளை எட்டியுள்ளதாக வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ள மத்திய வங்கி, இந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## 4 பண்ணைகளில்...

இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவாது என்றார்.

வைரஸ் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் பன்றிகளை உடனடியாக கால்நடை மருத்துவரிடம் காண்பிக்குமாறும் பண்ணை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் நோய்க்கு தடுப்பூசி தேவையான போதிலும் குறித்த தடுப்பூசிகள் தற்போது நாட்டில் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சீனா பூரண ஆதரவளிக்கும்

சீன வெளிவிவகார துணை அமைச்சர் சன் வெய்டாங்கின் இலங்கை விஜயம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் ஒத்துழைப்பை அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அக்கரைப்பற்றில்...

ஆயினும் ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் பெற்றோல் இருப்பு இருந்த நிலையில் தூர பிரதேச வாகனங்களும் அங்கு வருகை தந்தமையால் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்து எரிபொருளை பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் அங்கு வருகை தந்த நிலையில் அவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு பெற்றோல் விநியோகிக்கப்பட்டதுடன், அதிகளவான வாகனங்களின் வருகையால் சில மணிநேரத்தில் அங்கும் எரிபொருள் முடிவடைந்தது.

எனினும், பெற்றோல் கொள்வனவிற்கான பணம் செலுத்துப்பட்டுள்ளதால் வியாழக்கிழமை (01) எரிபொருள் கிடைக்கும் எனவும் வழமைபோன்று எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் எரிபொருள் நிலைய உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தங்கம் சரிந்தது...

ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை 149,000 ரூபாயாகவும் 24 கரட் தங்கம் 162,000 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

## யூரியாவின்...

இதற்கமைய தற்போது 10 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவரும் 50 கிலோ கிராம் யூரியா உர மூடையை 9 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

ஜூன் 10 முதல் 12 வரை 31,500 மெற்றிக் தொன் யூரியா உரம் நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், கடந்த போகங்களில் தனியார் நிறுவனங்களால் 42 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த யூரியா உர மூடையின் விலை 11 ஆயிரம் ரூபாயாக குறைந்துள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை விவசாயிகள் இந்த வாரம் உர வவுச்சர்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வவுச்சர்கள் இந்த வாரம் கிடைக்காவிட்டால் விவசாயிகள் அது குறித்து தங்களுக்கு அறியப்படுத்துமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## மருந்து விலைகளை...

190 ரூபாயாகக் காணப்பட்ட அமெரிக்க டொலரின் பெறுமதியானது 370 ரூபாயாக அதிகரித்த போது மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களின் விலை உடனடியாக அதிகரித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், டொலரின் பெறுமதி தற்போது குறைந்துள்ள காரணத்தால் அனைத்து பொருட்களின் விலைகளும் குறிப்பாக உணவு மற்றும் மருந்துகளின் விலை குறைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## இலங்கை ரூபாய்க்கு...

290 ரூபாயாகக் காணப்படும் அமெரிக்கடொலரின் பெறுமதி டிசெம்பர் மாத இறுதிக்குள் 350 ரூபாயாக உயர்ந்து இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் பிணை முறிச் சந்தையின் வரத்து ஆகியவற்றால் இலங்கை நாணயத்தின் ஆதாயம் உலகளவில் வருமானத்தைக் கண்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட 2 பில்லியன் டொலர் நிதி வசதி காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க உதவியதாகவு இலங்கையின் பொருளாதாரம் ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக அதன் மோசமான நெருக்கடியிலிருந்து மெதுவாக வெளிவருகிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும், கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தைப் பெறவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போது, ரூபாயின் மீது மீண்டும் அழுத்தம் ஏற்பட்டு புதிய தாழ்வுகளுக்குப் பாதை அமைக்கலாம் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஜூன் மாத தொடக்கத்தில் பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த காலாண்டில் ஒரு டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 280 முதல் 320 வரை வர்த்தகம் செய்யப்படலாம் என்றும் ஆண்டின் இரண்டாம் பாதியில் டொலரின் பெறுமதி உயரும் என்று ஃபர்ஸ்ட் கப்பிடல் தெரிவித்துள்ளது என்று புளூம்பேர்க் சுட்டிக்காட்டியுள்ளது.

## மத்தியிலும்...

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கால்நடைகளை போக்குவரத்துச் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் இந்த கால்நடை நோய் உத்தியோகபூர்வ பிரிவுகளில் பதிவாகியுள்ளது என மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் டொக்டர் ஆர்.எம்.கே.பீ. ராஜநாயக்க தெரிவித்தார்.

தற்போது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை மற்றும் கலேவெல கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, நுவரெலியா மாவட்டத்தில் ராகலை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய உடுநுவர குவாட்டல்வ ஆகிய பிரதேசங்களில் கால்நடைகளுக்கு தோல் நோய் பரவி வருகின்றமை இனங்காணப்பட்டுள்ளதாக பிரதேச கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர் என்றார்.

எவ்வாறாயினும், இது ஒரு வைரஸ் நோய் என்பதால், நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பாதிக்கப்பட்ட விலங்குகளுக்கு உடனடி சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நோய் பதிவாகியுள்ள பிரிவுகளிலிருந்து விலங்குகளை வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கால்நடைகளின் முதுகில் கட்டிகள் தோன்றுவதன் மூலமும் தோல் நோய்த்தொற்றுகள் மூலமும் இந்நோயை அடையாளம் காண முடியும் எனவும், கால்நடைகள் தொடர்பில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அருகில் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறும் மத்திய மாகாண பணிப்பாளர் திருமதி ராஜநாயகம் விவசாயிகளை கேட்டுக்கொள்கிறார்.

## சட்டவிரோத செயலில் ஈடுபடும்...

அமரர் ரெஜி ரணதுங்கவின் 15வது நினைவு தினத்தை முன்னிட்டு, உடுகம்பலையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தியதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெற்றிபெறாத செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்திற்கு எதிராக மதவாதத்தையும் இனவாதத்தையும் தூண்ட முயற்சிப்பதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். எந்தவொரு குழுவும் தேசிய அரசாங்கத்திற்கு வந்தால் அதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்படுமா? என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், “நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடிகளை தீர்க்க தேசிய அரசாங்கத்தை அமைக்க வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அதற்கு இன்னொரு வாய்ப்பும் உள்ளது. எதிர்காலத்தில் தேசிய அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் அதற்காக ஒரு குழு ஒன்று கூடினால் அதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி சிந்தித்து செயற்படுத்துவார்” என்றார்.

இப்போது மதப் பிரச்சினை பெரிதாகி வருவதைக் காண்கிறோம். இதை ஓர் அரசாங்கம் எப்படி எதிர்கொள்ளும்? என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

“இப்போது மதங்களுக்கு இடையே நெருக்கடியை உருவாக்கப் பார்க்கின்றார்கள். இது வெற்றி பெறாவிட்டாலும் இனவாதத்தை உருவாக்க முயல்வார்கள். வெசாக்கிற்கு கறுப்புக்கொடி ஏற்றி கறுப்பு வெசாக் கூடு கட்டியவர்கள் இன்று மதத்திற்காக பேசுகின்றனர். போராட்டத்தில் இருந்த கலைஞர்கள் செய்ததை நாடு பார்க்கிறது. இதற்கு யார் பணம் செலவிடுவார்கள்?

நாட்டில் மாற்றம் என்பது ஆட்சி மாற்றத்தைக் குறிக்காது. வழிமுறையில் மாற்றம் வர வேண்டும். அதற்கு மக்களின் அணுகுமுறையில் மாற்றம் தேவை. இதை புரிந்து கொள்ள வேண்டும். பொய் என்ற பெயரில் வெறுப்பை பரப்பி செய்த போராட்டத்தின் பலனை இன்று நாம் அனுபவித்து வருகிறோம்” என்றார்.

சீன பிரஜை குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், “ இது குறித்து அரசாங்கம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது. அவர்களை அரசு தடுக்காது. சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதை அரசு செய்கிறது. இதில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு கிடையாது. தமது கட்சியாயிருந்தாலும் தங்கம் கொண்டு வந்த நபருக்கு தண்டனை வழங்கப்பட்டது. அத்தகைய தண்டனை பெற்ற பிறகு பாராளுமன்றம் வருவதா வேண்டாமா என்று அந்த நபர் தீர்மானிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

## மலிவு உணவு...

எனவே, உணவு மற்றும் பானங்களை பச்சை (சிறந்த தெரிவு), மஞ்சள் (கவனமாக தேர்ந்தெடுங்கள்) மற்றும் சிவப்பு (மட்டுப்படுத்தல்) என மூன்று குழுக்களாக வகைப்படுத்த சுகாதார அமைச்சு சமிக்ஞை விளக்கு அமைப்பை அறிமுகப்படுத்தியது.

அதில், சிகப்பு நிற குறிகாட்டியுடன் கூடிய உணவுப் பொதிகளை கொள்வனவு செய்வதை மட்டுப்படுத்துமாறு வைத்தியர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அதிக அளவு சீனி, கொழுப்பு மற்றும் உப்பு உள்ள உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தவும், குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு அவற்றைக் கொடுப்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

## டிஜிட்டல் மயப்படுத்த...

இதற்காக நிதியுதவி மற்றும் நவீன தொழில்நுட்பத்தை வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்க முடியும் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்த பில் அன்ட் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் அதிகாரிகள், அது பற்றிய விடயங்களை விரிவாக முன்வைத்தனர்.

மேலும், உத்தேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

## இலங்கை இரத்தினங்களை...

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல், வர்த்தகம், முதலீடுகள் மற்றும் மத உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடுவது இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் பொருளாதார செயற்பாடுகளை மீள கட்டியெழுப்புவதற்கும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள திட்டங்கள் குறித்து தாய்லாந்து பிரதமருக்கு, பிரதமர் தினேஷ் குணவர்தன விளக்கமளித்துள்ளார்.

## கை நீட்டிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் வெலிகம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

10,000 ரூபாயை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட போதே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு ஆதரவாக செயற்படுவதற்காக சந்தேக நபர் இவ்வாறு இலஞ்சத்தை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பொலிஸ் அதிகாரிகள் மீது கத்தி குத்து

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரைத் தேடி குருந்தெனிய பகுதிக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மீது கத்தி குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் சார்ஜன்ட் ஆகியோர் காயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் குருந்தெனிய பிரதேசத்தில் வயல்வெளியில் இருப்பதாக நேற்று (30) மாலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, இவரை கைது செய்ய குறித்த அதிகாரிகள் சென்றுள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட போது பொலிஸ் அதிகாரிகளுடன் சண்டையிட்டு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

சந்தேக நபரைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு அவரைக் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## புருனோ திவாகரா கைது

நகைச்சுவை நடிகர் நடாஷா எதிரிசூரிய பௌத்த மதம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியது தொடர்பாக SL-Vlogs இன் உரிமையாளர் புருனோ திவாகரா குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# 11,829 குடும்பங்கள் பாதிப்பு

## வீட்டுத் திட்ட நிதி முழுமையாகக் கிடைக்கவில்லை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள் குடியேறிய குடும்பங்களுக்கு 2018, 2019 ஆம் ஆண்டுகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, முதற்கட்ட, இரண்டாம் கட்ட பகுதிக் கொடுப்பனவுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த வீட்டுத் திட்டங்களை விரைவாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று அதிகாரிகள் வழங்கிய அழுத்தங்கள் காரணமாக, தங்களிடமிருந்த நகைகளையும் ஏனைய பெறுமதியான பொருட்களை விற்றும் வங்கிகளில் கடன் பெற்றும் அதற்கும் மேலாக நுண்நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன்களைப் பெற்றும் வீட்டைக் கட்டியுள்ளார்கள்.

ஆனால், இரண்டு கட்ட கொடுப்பனவுகளைத் தவிர, வீட்டுத் திட்டங்களுக்கான முழுமையான நிதி வழங்கப்படாத நிலையில் சுமார் 11ஆயிரத்து 829குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

## வட்டுவாகல் சப்த கன்னியர் கோவிலுக்கு

# தீர்த்தம் எடுப்பதற்கு அனுமதி

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல், சப்த கன்னியர் கோவிலின் உற்சவ காலத்தில், தீர்த்தம் எடுத்து செல்வதற்கான பாதை இராணுவ உயர் பாதுகாப்பு வலையத்துக்குள் அமைந்துள்ளதால், தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி பல வருடங்களாக இராணுவத்தினரால் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

கோவில் நிர்வாகத்தினர் இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கவனத்துக்கு கொண்டு வந்ததன் பிரகாரம், முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளை அதிகாரி, கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர், கோவில் நிர்வாகத்தினர், பாராளுமன்ற உறுப்பினர் சகிதம் குறித்த இடத்துக்கு புதன்கிழமை (31 விஜயம் மேற்கொண்டனர்.

இராணுவ கட்டளை அதிகாரிக்கு பாராளுமன்ற உறுப்பினர் விடயங்களை தெளிவுபடுத்தியதன் பிரகாரம், இடையூறு இன்றி தீர்த்தம் எடுப்பதற்குரிய அனுமதி, மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியால் வழங்கப்பட்டது.



# 52 வயதான பெண் நீரில் மூழ்கி பலி

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஸ்டெஸ்பி தோட்ட குமரி பிரிவில் உள்ள சாமிமலை ஆற்றில் நீராடச் சென்ற 52 வயதான பாலன் தனலெட்சுமி, தடுக்கி விழுந்து நீரில் மூழ்கி பலியான சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (28) பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

இறந்த நிலையில் கிடந்த பெண்ணை மீட்ட மஸ்கெலியா பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மரணமடைந்த பெண், கடந்த முப்பது ஆண்டுகளாக வலிப்பு நோயால் பீடிக்கப்பட்டு இருந்தவர் என்றும், நீரில் விழுந்த போது அவருக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சட்ட வைத்தியர் தெரிவித்தார் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

பரிசோதனையின் பின்னர், அவரது குடும்பத்தினரிடம் பூதவுடல் ஒப்படைக்கப்பட்டது.

# யாழ். நூலக எரிப்பின் நினைவுதினம்

■ க. அகரன்

யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்ட 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக, அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம்



மேற்கொள்ளும் கொட்டகையில் குறித்த நிகழ்வு நேற்று (31) இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள், யாழ். பொதுநூல் நிலைய எரிப்பானது தமிழ் இன அழிப்பின் ஒரு வடிவம் என குறிப்பிட்டனர்.



# வளிமாசடைதல் விழிப்புணர்வு சைக்கிள் சவாரி

■ வி.ரி சகாதேவராஜா

வளிமாசடைதல் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சைக்கிள் சவாரி, களுவாஞ்சிக்குடியில் நேற்று (31) இடம்பெற்றது.

தேசிய சுற்றாடல் தின கொண்டாட்டத்தின் ஓரங்கமாக, ' பிளாஸ்டிக் மூலம் ஏற்படக்கூடிய மாசைத் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சைக்கிள் சவாரி, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், கணக்காளர் சா. விக்னராஜா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## அமரா பெண் குடும்ப தலைவர்களின்

# கோரிக்கைகளும் சிபாரிசுகளும்

■ எம்.யூ.எம் சனூன்

புத்தளம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்த, 'எங்களின் குரல்' அமரா பெண் குடும்ப தலைவர்களின் கோரிக்கைகளும், சிபாரிசுகளும் பங்குதாரர்களுடன் பகர்ந்து கொள்ளும் ஒன்றுகூடல் நிகழ்வு புதன்கிழமை (31) புத்தளம் - மன்னார் வீதியில் அமைந்துள்ள 'வில்பத்து கேட்' கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



புத்தளம் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் கருத்திட்ட அதிகாரி ஆர். சுகுனாவின் ஏற்பாட்டில், விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மைத்திரி ராஜசிங்கம் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

எட்டு மாவட்டங்களை உள்ளடக்கியதாக பெண் குடும்ப தலைவிகள் எதிர்நோக்கும் பல்வேறு விதமான பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளும் சிபாரிசுகளும் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளால் இங்கு முன்வைக்கப்பட்டன.

# செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை

■ எஸ்.சதீஸ்

நோர்வூட் பிரதேச சபையின் வாகனத்தை தாம் சொந்த தேவைகளுக்கு பாவித்ததாக ஊடகங்களில் வெளியான செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை என நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ரவிகுழந்தைவேல் விளக்கமளித்தார்.

பொகவந்தலாவையில் புதன்கிழமை (31) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தில் எனது சொந்த தேவைகளுக்கு பொருட்களை ஏற்றி சென்றதாகவும் செய்தி வெளியாகியிருந்தது.

அனைத்து வாகனங்கள் மற்றும் ஆவணங்கள், பொறுப்புகள் போன்றவை நோர்வூட் பிரதேச சபையின் செயலாளரிடம் மார்ச் மாதம் 19ஆம் திகதி ஒப்படைத்து விட்டேன். அதன் பிறகு எனக்கும் பிரதேச சபைக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை.

நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் பொகவந்தலாவைக்கு கடந்த 28ஆம் திகதி வருகை தந்தபோது, சந்தித்து கலந்துரையாடினேன். இதனை படமாக எடுத்து செய்தி



வெளியிட்டமை எனக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே செய்யப்பட்டது.

அரசியல் ரீதியாக பழிவாங்கும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

இந்தச் சம்பவம் தொடர்பில், நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் கே. முரளிதரன் கருத்து தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்கள் மார்ச் 19ஆம் திகதி கலைக்கபட்டபோது, தவிசாளரிடம் இருந்த வாகனங்கள் மற்றும் பொறுப்புகள் அனைத்தும் முறையாக என்னிடம் ஒப்படைக்கப்பட்டன.

நோர்வூட் பிரதேச செயலக திறப்பு விழா மே.29ஆம் திகதி நடைபெற்றது. இதுதொடர்பில் பொகவந்தலாவைக்கு நான் சென்றிருந்தேன். அதன்போது முன்னாள் தவிசாளர் சந்தித்தார். அதனை படமாக எடுத்து பிரசுரித்துள்ளனர் என்றார்.

# மாற்றுத் திறனாளிகளுக்கான கொள்கை வரைபு குறித்த கலந்துரையாடல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம், மாற்றுத் திறனாளிகளுக்கான கொள்கை வரைபை, ஒன்பது பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதாக பல்வேறுபட்ட தரப்பினரின் கருத்துகளை உள்வாங்கி தயாரித்துள்ள நிலையில், குறித்த கொள்கை வரைபை துறைசார்ந்தவர்களுக்கு விளக்கமளித்து திருத்தங்களை மேற்கொள்ளும் கலந்துரையாடல், செவ்வாய்க்கிழமை (30) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.



வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அகல்யா செகராஜா ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனனின் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

2018ஆம் ஆண்டு, வடமாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான ஒன்றியத்தால் (NP CODA), வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கான கொள்கை வரைபு தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# லின்ஸ்டெட் குடிநீருக்கு உயிர்க்கொடுப்பாரா ஜீவன்



■ எஸ்.சதீஸ்

பொகவந்தலாவ, லின்ஸ்டெட் கீழ் பிரிவு தோட்ட மக்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டம் 05 வருடங்கள் இரண்டு மாதங்கள் கடந்துள்ளன. எனினும், இதுவரையிலும் நீர்விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என அத்தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சால் செயற்படுத்தப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டு திட்டமானது 226 இலட்சம் ரூபாய் செலவில் 2019.03.23ம் திகதி இத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பாராமரிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டபோது முறையாகப் பராமரிக்கப்படவில்லை.

இதனால், குழாய்கள் துருப்பிடித்துள்ளன. அப்பகுதியும் பற்றைக்காடாக காட்சியளிக்கின்றது.

அத்தோட்டத்தில் மாத்திரம் 126 குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனினும், அத்திட்டம் இன்னுமே கையளிக்கப்படவில்லை. பராமரிப்பு தொடர்பில் அதிகாரிகள் எவரும் கவனம் செலுத்துவதில்லை என்றும் அம்மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆகையால், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், தலையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தச் சொத்துகளை காப்பாற்றுவதுடன், தங்களுக்குத் தேவையான நீரை முறையாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அத்தோட்ட மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## கலாபூஷணம் ஸக்கியா சித்திக் பரீட்டுக்கு

# 'கவிநயம் சுடர் மணி' விருது

■ எம்.எஸ்.எம் ஸாகிர்



இந்தியா, திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி, பசுமை வாசல் பவுண்டேஷன் நடத்திய கோடைக்கால 'நட்சத்திர சுடர் மணி 2023' விருதுகள் போட்டியில், கவிதைப் பிரிவில் இலங்கையில் இருந்து பங்கு பற்றிய சிரேஷ்ட எழுத்தாளரும் ஆசிரியரும் கவிஞருமான கலாபூசணம் ஸக்கியா சித்திக் பரீட், 'கவிநயம் சுடர் மணி' விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்திய பசுமை வாசல் பவுண்டேஷன் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக சமூகப்பணி, இலக்கியப் பணி, இயற்கைப் பணி, எழுத்துப்பணியில் ஈடுபட்டு வருகின்ற பல்துறை சாதனையாளர்களுக்கு வருதுகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போர மாநாடு:

# வேட்புமனு சமர்ப்பிக்க அவகாசம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 26 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பு-10 இல் அமைந்துள்ள தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் ஜூன் மாதம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

வழமைபோன்று இரு அமர்வுகளாக மாநாடு நடைபெறவிருப்பதோடு, இரண்டாவது அமர்வில் யாப்பு திருத்தம், புதிய உத்தியோகஸ்தர் தெரிவு என்பன இடம்பெறும் என போரத்தின் செயலாளர் சிஹார் அனீஸ் தெரிவித்துள்ளார்.

SLMMF

புதிய உத்தியோகஸ்தர் தெரிவுக்கு வேட்பு மனு கோரப்பட்டுள்ளதோடு, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்கும் 11 செயற்குழு அங்கத்தவர்கள் பதவிகளுக்கும் போட்டியிட விரும்புவோர். ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலிலோ நேரிலோ செயலாளருக்கு வழங்கி வைக்குமாறும் வருடாந்தக் கட்டணம் செலுத்தாதவர்கள் அதனை மீடியா போரத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை 0777874983 எனும் இலக்கத்திற்கு அனுப்புமாறும் கோரப்படுகிறது.

# அம்மை நோய் தீவிரமாவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை அவசியம்

ஒரு பிரச்சினை இல்லாவிட்டில், மற்றொரு பிரச்சினை வந்து கொண்டே இருக்கிறது, இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் எப்போதுதான் முற்றுப்புள்ளி வைக்கப்படுமோ என, சதாகாலமும் சிந்தித்துக்கொண்டே இருக்கும் வகையில், தொற்றுநோய்கள் பரவிக்கொண்டிருக்கின்றன.

இதில், டெங்கு, மலேரியா போன்ற நோய்களின் தாக்கம் அதிகரித்துச் செல்வதற்கு, தங்களைச் சுற்றி சுத்தமாக வைத்திருக்காதவர்கள், மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான நோய்களை பரப்பும் நுளம்பு வகைகளின் பெருக்கத்துக்கு ஏதுவான வகையில் சுற்றுசூழலை வைத்திருப்போர் பொறுப்புக்கூறவேண்டும்.

கொரோனாத் தொற்று அதிகரித்துச் செல்வதற்கு, பாதிக்கப்பட்டவர்களே பொறுப்பாளிகள் ஆவர். முறையாக முகக்கவசத்தை அணியாமல், தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாத மற்றும் ஏனைய நோய்த்தாக்கங்களுக்கு உள்ளான வயோதிபர்களே கொரோனாவுக்குள் சிக்கிக்கொள்கின்றனர்.

இதற்கிடையே, பன்றிகளிடையே ஒருவகையான வைரஸ் பரவி வருகின்றது. அந்த வைரஸ் பரவல் மேல் மாகாணத்தில் நான்கு பண்ணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. நோய்த் தொற்று காணப்படும் பண்ணைகளில் இருந்து பன்றிகளை வெளியே கொண்டு செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் பரவிய அம்மை நோயால் சுமார் 2,000 மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த நோய் மத்திய மாகாணத்தில் உள்ள மாடுகளுக்கும் பரவியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இந்த அம்மை நோய், ஏனைய மாகாணங்களுக்கும் பரவுவதை தடுக்கும் வகையில், மாடுகளை ஏற்றியிறக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், மத்திய மாகாணத்தில் பல இடங்களில் இந்த அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ள மாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. அந்த மாகாணத்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாடுகளை இறைச்சிக்காக பயன்படுத்துவது உகந்ததல்ல என சுகாதார திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

உடலுக்கு தேவையான போஷாக்கான உணவை நாளொன்றுக்கு எத்தனை பேர் உட்கொள்கின்றனர் எனப் பார்த்தால், அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் போஷாக்கான உணவை உட்கொள்வதில்லை. வயிற்றுப் பசிக்காகவும் தங்களுக்கு கிடைக்கும் உணவையுமே உண்டு, நாள்களை கழித்துக்கொண்டிருக்கின்றனர்.

கிடைக்கும் வருமானத்துக்கு ஏற்றவகையில் வாழமுடியாத நிலைமையே நாட்டில் இருக்கின்றது. எனினும், ஒவ்வொருவரும் சந்தோஷமாகவே வாழ்கின்றனர் என்ற பிரமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மரக்கறிகளின் விலைகள், கோழி இறைச்சி, மீன், கோழி முட்டை போன்றவற்றின் விலைகள் எகிறி நிற்கின்றன. தங்களுக்கு மட்டுமன்றி, தங்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையான நிறை உணவைக்கூட வாங்கிக்கொடுக்க முடியாத நிலைமைக்குள் பெற்றோர் பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, கால்நடைகளுக்கு வந்திருக்கும் நோய், வியாபித்துவிட்டால், பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அம்மை நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை இறைச்சிக்காக உண்ணக்கூடாது என்றால், அவ்வாறான மாடுகளில் இருந்து கறக்கப்படும் பாலையும் பயன்படுத்தமுடியாது.

இது, இருக்கும் பிரச்சினையை இரட்டிப்பாக்கிவிடும். மருந்துச் செலவுகளை நினைத்துக்கூட பார்க்கமுடியாத நிலைமை ஏற்படும். அந்த நோயைக் கட்டுப்படுத்த மருந்துகள் இருக்கின்றனவா என்பது கூட தெரியவில்லை. ஆகையால், அம்மை நோய் தீவிரமாவதைக் கட்டுப்படுத்த அவசர நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எந்தவிதத்திலும் தன்னைப்பற்றி, பெருமைபடக்கூடாது. அதே சமயம் ஒருபொழுதும் சிறுமைப்படவும்கூடாது.

வாழ்க்கையில் இடையூறுகள் வருவதும் போவதும் சாதாரணமானது எனக் கருத வேண்டும். உயர் நிலைக்கு வந்த பின்னர் ஆணவம் கொள்ளலாகாது. துன்பங்களுடன் இணைந்து கொள்வது, தன்னைத்தானே வதைப்பது போலாகும்.

வாழும் உரிமைகளை நல்லபடி பயன்படுத்துதல் வேண்டும். தவறான நடவடிக்கைககள் மூலம், கசப்பான அனுபவங்களை வலிந்து அனுபவிப்பது துரதிர்ஷ்டமானது.

உலகியல் மாற்றங்கள் யாவரையும் மாற்ற முயலும். ஆனால், ஸ்திரமாக வாழ்ந்தால் எந்த எதிர்வினைகளையும் தராது. .

எங்களின் பார்வை என்றுமே தீட்சண்யமாக அமைய வேண்டும்; குழப்பம் தேவையில்லை. நல்லவற்றில் கலக்கம் தேவையில்லை. தீயதை அகற்றிவிடுக. சின்னக் கருமங்களை எட்டாதது என எண்ணுவது முட்டாள்தனம். நல்லன எல்லாமே நிறைவேற்றக் கூடியவைதான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இஸ்ரேல் போன்று இலங்கையும் இனரீதியான ஆட்சி செலுத்துகிறது

இனரீதியான ஆட்சி என்றால் என்ன? இலங்கையில் இனரீதியான ஆட்சி நடக்கின்றதா என்பது குறித்து, யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்து கருத்தை அடிப்படையாக வைத்து, இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மக்களாட்சி அல்லது ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசாங்கமாகும். மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சியே மக்களாட்சி என்றார் ஆபிரகாம் லிங்கன்.

மக்களாட்சியில் சட்ட சமத்துவம், அரசியல் சுதந்திரம் மற்றும் சட்ட விதிமுறைகள் ஆகியன முக்கியமாக இடம்பெறுவன. மக்களாட்சியில் மூன்று முக்கிய அடிப்படைக்கோட்பாடுகள் பாதுகாக்கப்படுகின்றன.

1. உயர்ந்த கட்டுப்பாடு: அதாவது அதிகாரத்தில் மிகவும் குறைந்த அளவிலான இறையாண்மை காட்டுவது.

2. அரசியல் சமத்துவம்

3. தனி நபர்களும் நிறுவனங்களும் சமூகநெறியாக மேற்படி கட்டுப்பாட்டையும் சமத்துவத்தையும் தம் வாழ்வில் கடைப்பிடித்தல்.

ஆனால், ஓர் அரசாங்கத்தின் நிறுவன செயற்பாடுகளை தனது நலவுரித்துகள், அதிகாரங்கள், வளங்கள் ஆகியனவற்றின் மேம்பாட்டுக்காக ஓர் ஆதிக்கமுள்ள இனக் கூட்டமானது வழிநடத்த ஏற்படுத்தும் ஓர் அரசியல் ரீதியான அமைப்பே இன ரீதியான ஆட்சி முறையாகும்.

இன ரீதியான ஆட்சி குறித்து, புவியியல், நகர ஆராய்ச்சி போன்றவற்றில் உலகறிந்த இஸ்ரேலிய நிபுணரான பேராசிரியர் யிவ்டசெல், இன ரீதியான ஆட்சி செலுத்தும் நாடுகள் பற்றி, இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் முதன் முதலில் தமது கருத்தை வெளியிட்டார். தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக பெரும்பான்மை சிங்கள அரசாங்கங்களால் இலங்கையில் நடைபெற்ற காணி அபகரிப்பை ஆராய்ந்து, இலங்கையும் இஸ்ரேல் போன்று ஓர் இன ரீதியான ஆட்சி செலுத்தும் நாடு என்று முடிவெடுத்தார்.

முக்கியமாக தமிழ் மக்களுக்கு எதிராகவும் அண்மையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் தொடர்ந்து வரும் சிங்களப் பெரும்பான்மையின அரசாங்கங்கள் இன ரீதியான ஆட்சியையே செலுத்தி வருகின்றன.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த நாள்களில் இருந்தே சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். பிரித்தானியர் காலத்தில் வடகிழக்குக்கு வெளியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை அடித்துத் துரத்த, சுதந்திரம் கிடைத்த உடனேயே நடவடிக்கைகள் எடுத்தார்கள்.

இப்போது, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களைத் தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து விரட்ட, திணைக்களங்கள் மார்க்கமாக நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்றவேண்டும் என்பதே இவர்களது குறிக்கோளாகும். வழக்கமாக இனரீதியான ஆட்சியாளர்கள், இனப்படுகொலைகளில் ஈடுபடுபவர். இலங்கையிலும் அதுவே நடந்து வந்துள்ளது.

3,000 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் தமிழர்கள் தொடர்ந்து வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன. சிங்கள மொழி வழக்குக்கு வந்ததோ, இன்றிலிருந்து 1,400 வருடங்களுக்கு முன்னர்தான். அதற்கு முன்னர் 'சிங்களவர்'கள் என்று ஓர் இனமோ, சிங்களம் என்ற மொழியோ இருக்கவில்லை. மகாவம்சம் கூட சிங்கள மொழியையோ இனத்தையோ பற்றி எதுவும் கூறவில்லை. குறித்த நூல் பாளி மொழியிலேயே எழுதப்பெற்றது. அப்படியிருந்தும் 2,500 வருடங்களுக்கு மேலாக சிங்கள மக்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வந்திருப்பதாக பொய்யையும் புரட்டையும் உலாவ விட்டுள்ளார்கள் சிங்கள சரித்திர ஆசிரியர்கள்.

சரித்திர ரீதியாக தமக்குப் பல தடங்கல்கள் இருப்பதை உணர்ந்துதான் இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து தமிழர்களை இந்த நாட்டில் இருந்து விரட்ட வெளிப்படையான மற்றும் அந்தரங்க நடவடிக்கைகளில் சிங்கள அரசியல்வாதிகள் ஈடுபட்டு வந்துள்ளனர். கலகங்களை உருவாக்கி தமிழர்களைத் தமது வாசஸ்தலங்களில் இருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாவே சிங்கள குடியேற்றங்கள் தொடர்ந்து வந்த பெரும்பான்மையின அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்டதன் காரணமே மேற்கூறிய இனரீதியான ஆட்சியின் மனோநிலையே ஆகும்.

தமிழர்களை விரட்டும் நடவடிக்கைகள் சிங்கள அரசியல்வாதிகளாலும் உயர் மட்ட அரச அலுவலர்களாலும் நன்றாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குடியேற்றங்களில், குடியேற்ற இடங்களில் வசிக்கும் மக்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் அல்லது அந்தப் பிரதேச அல்லது மாவட்ட மக்களுக்கே குடியேற்றத்தில் கலந்து கொள்ளும் உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

> **பிரித்தானியர் காலத்தில் வடகிழக்குக்கு வெளியில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை அடித்துத் துரத்த, சுதந்திரம் கிடைத்த உடனேயே சிங்கள ஆட்சியாளர்கள் நடவடிக்கைகள் எடுத்தார்கள்.**
> **இப்போது, தமிழ் மக்களைத் தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து விரட்ட, திணைக்களங்கள் மார்க்கமாக நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள். இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக மாற்றவேண்டும் என்பதே இவர்களது குறிக்கோளாகும்**

அது மட்டுமல்ல! குடியேற்றக்காரர்கள் அந்தப் பிரதேச இன மக்களின் ஒரே இனத்தவராக இருக்க வேண்டும். இவ்வாறான சர்வதேச சட்ட கோட்பாடுகளை மீறும் விதமாகவே சிங்கள குடியேற்றங்கள், தமிழரின் தாயகப் பிரதேசத்தில் தற்போது நடைபெற்ற வருகின்றன.

இவ்வாறான குடியேற்றங்களினூடு காலாகாலத்தில் அவர்கள் வாழ்விடங்களிலேயே தமிழ் மக்களை சிறுபான்மையோர் ஆக்க வேண்டும் என்ற இன ரீதியான சிந்தனையே அவர்களை இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்துள்ளது.

அவர்களின் மிக அண்மைய நடவடிக்கைகளே குருந்தூர் மலையிலும் வெடுக்கு நாறி மலையிலும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகள் ஆவன. தொல்பொருள் திணைக்களம், வடகிழக்கில் பௌத்தம் இருந்ததற்கான சான்றுகள் இருந்ததாகக் கூறி, பிற மத வணக்கஸ்தலங்களை அழித்து வருகின்றது.

முக்கியமாக, இந்து மக்களின் வணக்கத் தலங்களும் சிலைகளுமே அவர்களின் இன ரீதியான வெறியாட்டத்துக்கு ஆளாகியுள்ளன. நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் கோவிலின் மூலவர் திருடப்பட்டுள்ளார். மற்றைய சிலைகளும் திருடப்பட்டுள்ளன அல்லது சிதைக்கப்பட்டுள்ளன. அந்த இந்துக் கோவில் இருந்த இடத்தில் வட்டமான பர்வத விகாரை உருவாக்கப்பட்டு கூகிளிலும் குறித்த பௌத்த விகாரை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் முக்கியமாக, எமது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், 2,000 வருடங்களுக்கு முன்னர், பௌத்த வணக்கஸ்தலம் குறித்த இடங்களில் இருந்திருக்கக்கூடும். ஆனால், அந்தக்கால கட்டத்தில் சிங்கள மொழியோ இனமோ உருவாகி இருக்கவில்லை. கி.பி 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளில்தான் சிங்கள மொழி, தமிழ் - பாளி மொழிகள் சேர்க்கையால் பிறந்தது. அந்த மொழியை பேசியவர்களே சிங்களவர்கள்.

அப்பொழுது தமிழ் பௌத்தர்களால் வழிபட்ட புத்த ஆலயங்கள், இப்போது, நவீன சிங்கள பௌத்தர்களின் ஆலயங்களாக புனர்நிர்மாணம் பெற்று வருகின்றன!

சில காலத்துக்கு முன்னர் ஓர் ஆணைக்குழு, இலங்கையின் புராதன வணக்கத்தலங்களையும் இடப்பெயர்களையும் வகைப்படுத்தி தயாரித்தது. பெருவாரியான இந்து கோவில் பெயர்களை எடுத்து வைத்து, தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களின் பெயர்களையும் எடுத்து வைத்து, அந்த ஆணைக்குழு அவற்றுக்கு சிங்களப் பெயர்களை இட்டது.

மிகப் பிரபல்யமான ஓர் உதாரணமே 'மணலாறு' என்ற புராதன தமிழ் கிராமம், 'வலி ஓயா' என்ற சிங்களப் பெயரைப் பெற்றமையாகும். சிலகாலம் வாளாதிருந்து விட்டு, தற்போது குறித்த சிங்களப் பெயர்களே அந்தந்த இடத்தினதும் புராதனப் பெயர்கள் என்றும், சோழர் காலத்தில் தமிழர்கள், சிங்களக் கிராமங்களுக்கு தமிழ்ப் பெயர்களை வைத்தனர் என்றும் புரளியைக் கிளப்பி, சிங்கள மக்கள் அதனை நம்ப வழி செய்துள்ளனர்.

இவ்வாறான இன ரீதியான ஆட்சியின் பிரதிபலனால், வடக்கு, கிழக்குத் தமிழர்கள் தமது புராதன வாழ்விடங்களை இழக்கும் ஒரு நிலைக்கு இன்று வந்துள்ளது.

தமிழர்களே இந் நாட்டின் மூத்த குடிகள். பௌத்தம் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட போது சிங்கள மொழியோ இனமோ இருந்ததில்லை. தற்போது வடகிழக்கில் காணப்படும் பௌத்த சின்னங்கள் தமிழ் பௌத்தர்கள் காலத்தவை. ( பேராசிரியர் சுனில் ஆரியரத்ன எழுதிய 'தெமள பௌத்தையோ' என்ற சிங்கள நூலைப் பார்க்கவும்)

பிழையான வழியில், தம்மைத் தமது அரசியல்வாதிகளும் சில சிங்கள புத்திஜீவிகளும் இதுவரை வழிநடத்தி வந்துள்ளார்கள் என்பதை, சிங்கள மக்கள் என்று உணர்ந்து கொள்கின்றார்களோ அன்றுதான் இந்த நாட்டில் சமாதானம், சகோதரத்துவம், சமரசம் ஆகியன உதிக்கும்.

## கடிதங்கள்

### மண்முனை தென் எருவில் பற்று பிரதேச கிராமங்களில்

# குரங்குகளின் தொல்லைகள் அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட பல கிராமங்களிலும், குரங்குகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்களும் விவசாயிகளும் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவில் மட்டக்களப்பு வாவி ஓரங்களில் அமைந்துள்ள பற்றைக் காடுகளில் தங்கி நிற்கும் குரங்குகள், பகல் வேளையானதும், கிராமங்களுக்குள் புகுந்து, வீட்டுக் கூரைகளில் நடமாடித் திரிவதால் ஓடுகள் உடைகின்றன. இதுபோல், குடியிருப்புகளில் அமைந்துள்ள மா, கொய்யா போன்ற பயன்தரும் மரங்களையும், பழ வகைகளையும் சேதப்படுத்தி வருவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மக்கள் குடியிருப்புகளில் மாத்திரமின்றி கடற்கரையை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மிளகாய், கத்தரி, பயற்றை, வெங்காயம், போன்ற மேட்டுநிலப் பயிர் செய்கைகளையும் சேதப்படுத்தி வருவதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, கிராமங்களுக்குள் மாத்திரமின்றி, தமது வாழ்வாதாரத்துக்கும் பெரும் இடைஞ்சலாக இருந்துவரும் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வ. சக்தி



## இலங்கையின் பால் வளத்துறை:

# நிலைபேறான அபிவிருத்திக்கான மூலோபாயங்கள்

**சர்வதேச பால் தினம் இன்றாகும். இதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**



டொக்டர் ஏ.டி. நிமால் சந்திரசிறி BVSc, MBA, PhD.
சிரேஷ்ட கால்நடை வைத்தியர் சங்கம்





இலங்கையில் 2021ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாலின் அளவு 412 மில்லியன் லீட்டராகும். (பசுப்பால் 356 மில்லியன் லீற்றர், எருமைப்பால் 56 மில்லியன் லீட்டர்). இது அண்ணளவாக எமது தேசிய தேவைப்பாட்டின் 35% ஆகும்.

எமது தேசிய, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைத் துறையின் பங்களிப்பு மிகச் சிறிய அளவாக (0.94%) இருந்தபோதிலும், இதே காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பசுப்பாலினதும் எருமைப்பாலினதும் சந்தைப் பெறுமதி ரூபாய் 33 பில்லியனாகும். இது, 2022ஆம் ஆண்டில், பால் மற்றும் பாற்பொருட்களின் இறக்குமதிக்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகையான ரூபாய் 63 பில்லியனின் 52% ஆகும். மேலதிகமாக 1,610 மெற்றிக் தொன் பாலையும் பாற்பொருட்களையும் நாம் ஏற்றுமதி செய்திருந்தோம். இதன் பெறுமதி ரூபாய் 929 மில்லியனாகும்.

இலங்கையில், ஒழுங்கமைக்கப்பட்ட மாட்டிறைச்சி தொழிற்றுறை இல்லாதுள்ளது. மாட்டிறைச்சி, பால் வளத்துறையின் துணைப் பொருளாக உற்பத்தியாகின்றது. 2022ஆம் ஆண்டில், மாட்டிறைச்சி உற்பத்தி 27,860 மெற்றிக் தொன் ஆகும். இவற்றை எல்லாம் நோக்கும் போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பாற்பண்ணையாளர்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

இலங்கையில் தற்போது 308,512 பாற் பசுப்பண்ணைகளும் 30,855 எருமைப் பசுப் பண்ணைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலதிகமாக, பால், பாற்பொருட்களை விற்பனை செய்தல், அதற்குப் பெறுமதி சேர்த்தல், பாற்பண்ணைத் துறைகளுக்கான அடிப்படை வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் போன்றவற்றில் பெருமளவான நிறுவனங்களும் நபர்களும் ஈடுபட்டுள்ளனர்.

பாலினதும் பாற் பொருட்களுக்குமான கேள்வி அபரிமிதமாக உள்ளது. இதன் காரணமாக, 'நவீன உணவு மதிப்புச் சங்கிலி' (Modern food value chain) ஒன்று உருவாகியுள்ளது. இது பால் தொழிற்றுறைக்குச் சாதகமாக அமைந்துள்ளது.

'ஐஞ்சுவை' எனப்படும் ஐந்து வகையான பாற் பொருட்கள் (பசுப்பால், தயிர், மோர், வெண்ணெய், பாற்கட்டி) இலங்கையர்கள் மத்தியில் பிரபல்யமாக இருக்கின்றன. எனவே, இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு மிகப் பெரியளவான பங்களிப்பை பால்வளத்துறை வழங்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இலங்கையில் பெரும் எண்ணிக்கையான பால் உற்பத்தியாளர்கள் சிறிய அல்லது நடுத்தரப் பண்ணையாளர்களாகவே உள்ளனர். வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட அதிகளவான மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயம், கால்நடை வளர்ப்புத் துறைகளில் தங்கியுள்ளனர். எப்படியிருந்தபோதிலும், இலங்கையின் விவசாயத்துறை புறக்கணிக்கப்பட்டுள்ள காரணத்தால், விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் வேலைவாய்ப்பு இன்மையானது வறுமைக்கான முக்கிய காரணியாக உள்ளது.

எனவே விவசாயம், கால்நடைத்துறை ஆகியவற்றின் அபிவிருத்தி, வறுமை ஒழிப்புக்கான முக்கிய நடவடிக்கையாக ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்நடவடிக்கையின் மூலம் வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கவும் உணவுப்பொருள் விலைகளைக் குறைக்கவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோரின் சுகாதார நலன்களை மேம்படுத்தவும் குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும் இவற்றின் மூலம் மனித நலன்களையும் நல்வாழ்வையும் மேம்படுத்தவும் முடியும்.



பாற்தொழிற்றுறையைப் பொறுத்தமட்டில் பாற்பண்ணையாளர்கள் அநேகமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தரமான இனவிருத்திப் பொருட்களுக்கான பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது. பாற்பசு உணவுகளின் மூலப்பொருட்களினதும் உள்ளீடுகளினதும் தராதரம், அவற்றின் விலை, பாற்பசுக்களினதும் எருமைகளினதும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் இல்லாதொழிக்கவும் வினைத்திறன் வாய்ந்த நடைமுறைகள் இல்லாதிருத்தல், பாற்பண்ணைகளுக்கான விரிவாக்கல் சேவைகள் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளமை, நகர்மயமாதல் மற்றும் கிராமிய சூழல் மாற்றங்கள் காரணமாக பால்வளத்துறைக்குத் தேவையான நிலங்களும் வேலையாட்களும் கிடைக்காதிருத்தல், சூழல் வெட்ப தட்ப நிலைமாற்றங்கள், தகுந்த இடர் முகாமைத்துவம் பேணப்படாமை என்பன அவற்றில் சிலவாகும்.

இத்துறையின் அபிவிருத்தி குறித்து, அரசாங்கத்தின் நலன்சார்தலையீடு பின்வரும் நடைமுறைகளில் உறுதிசெய்யப்பட வேண்டும். இருக்கக்கூடிய எல்லா வளங்களையும் சிறந்த தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியமான நிதிக்கட்டமைப்பூடாகவும் ஏற்றுக்கொள்ளகூடிய சமூக பொருளாதார முறைமை ஊடாகவும் சூழலுக்கு இணக்கமான முறையிலும் முகாமைத்துவம் செய்வதன் மூலமும் பால்வளத்துறையின் அபிவிருத்தியானது தரமான பாலையும் பாற்பொருட்களையும் எல்லோரும் வாங்கக்கூடிய குறைந்த விலையில் வகுக்கப்பட வேண்டும். விலங்கு நலன் தராதரங்கள் பேணப்படும் அதேநேரத்தில் பால் மற்றும் பாற்பொருட்களின் விநியோகச் சங்கிலி, மதிப்புச் சங்கிலி ஆகியவற்றின் அபிவிருத்தியை நிலைபேறான விதத்திலும் செயற்றிறனுடைய செலவு அடிப்படையிலும் மேற்கொள்ளுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். மேலும், பாற்பண்ணை தொழில் முதலீட்டாளர்களுக்கு அவசியமான வழிகாட்டடல்கள், மேற்பார்வை செய்தல், காணி மற்றும் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை வழங்கல், காப்புறுதி வசதிகள் அத்துடன் குறைந்த வட்டியில் கடன் வசதிகளையும் உகந்த வரிச்சலுகைகளையும் வழங்குதல் வேண்டும்.

போதுமான அளவில் தரமான புல் வகைகளும் பாற்பசுத் தீவனங்களும் வருடம் பூராக கிடைக்கக் கூடியதை உறுதி செய்தல், உலக விலங்கு நலன் நிறுவனத்தின் வழிகாட்டலுக்கும் பரிந்துரைக்கும் அமைவாக ஆரோக்கியமான பாற்பசுக்ளையும் எருமைப்பசுக்ளையும் பராமரித்தல், மிகச் சிறந்த பண்ணை முகாமைத்துவத்துக்கென பண்ணையாளர்களுக்கு போதிய அறிவையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காகக் கால்நடை விரிவாக்கச் சேவையை மீளமைத்து ஒழுங்கமைத்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளுக்கு வலுவூட்டல் ஆகிவற்றின் மூலம் எமது நோக்கம் நிறைவேற அரசாங்கம் இவற்றுக்கு ஒரே நேரத்தில் போதிய சமனான கவனத்தை எடுக்க வேண்டும்.

மேலும் விலங்கு நோய்கள் சட்டம், விலங்குத் தீவன சட்டம், விலங்கு சட்டம், விலங்கு நலன் சட்டம் போன்ற நீதித்துறைச் சட்டங்களின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் என்பனவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அரசாங்கத்தினதும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட தனியாருடையதுமான பாற்பண்ணைகள், பரிந்துரை செய்யப்பட்ட மரபணு அமைப்பைக் கொண்ட இனப்பெருக்கப் பொருட்களை உற்பத்தி செய்யும் கரு மையங்களாகத் தொழிற்பட வேண்டும். விசேடமாக, இளம் சந்ததியினர் அடங்கிய பெருமளவானோரை இத்துறைக்கு கவர்ந்து ஈர்க்கக்கூடியதாகப் பாற்பண்ணைத் தொழிலின் சமூக ஏற்புடைத் தன்மையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது நகர்புறங்களை நாடிய இடப்பெயர்வைக் குறைப்பதுடன் வாழ்வாதாரத்துக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்தும். அத்துடன் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதாகவும் இருக்கும்.

1960 - 1970 காலப்பகுதியில் தம்பன்கடுவை பிரதேசம் (பொலன்னறுவை) மிக முக்கியமான பால் உற்பத்திப் பிரதேசமாக இருந்தது. பொலன்னறுவை, வெலிகந்தை, கந்தன்கடுவ, திருகோணமடுவ ஆகிய இடங்களில் பெரிய அளவிலான பாற்பண்ணைகள் இருந்தன. தற்போது இவற்றில் சில பண்ணைகள் இல்லை. 68% மாடுகளும் எருமை மாடுகளும் தாழ்நில உலர்வலயத்தில் உள்ளன மொத்த பால் உற்பத்தியில் 48% ஐயும் மொத்த மாட்டிறைச்சி உற்பத்தியில் 72% இதே வலயத்திலுள்ள கால்நடைகளிலிருந்து கிடைக்கின்றன. தவிர, பெரிய அளவிலான கால்நடைப் பண்ணைகள், பெரிய அளவிலான பால் பதனிடும் வசதிகள், இயற்கையான புல் விளையும் நிலங்கள், உபயோகத்தில் இல்லாத ஆனால், அபிவிருத்தி செய்து மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படக்கூடிய மிக விசாலமான காணிகள் இதே உலர் வலயத்தில் காணப்படுகின்றன. இந்த வலயத்தில் பால் உற்பத்தியை இருமடங்காக அதிகரிக்கக்கூடிய ஓர் ஐந்தாண்டு பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கையில், சிரேஷ்ட கால்நடை வைத்திய சங்கத்தின் அங்கத்தவர்கள் இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு எவ்வித தயக்கமும் இன்றி தமது முழு ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(தமிழாக்கம்: டொக்டர் வீ. லோகநாதன், BVSc, MBA.
சிரேஷ்ட கால்நடை வைத்தியர் சங்கம்)

# அமரர் லோரன்ஸ் பற்றி சில வரிகள்

டி.ஷங்கீதன்

மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் மலைய அரசியல் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வறிஞரும், எழுத்தாளர் சிறந்த தொழிற்சங்கவாதியுமான அந்தனி லோரன்ஸ், மே.30ஆம் திகதி காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது (71)

சுகவீனமடைந்த அவர், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்துள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியைகள், கொட்டக்கலை கொமஷ்சல் தகன சாலையில், வியாழக்கிழமை (01) நடைபெறும்.

அன்னாரின் இறப்பு, மலையகத்துக்கும் மலையக அரசியலுக்கும் பேரிழப்பாகும் என, தங்களுடைய இரங்கல் செய்தியில் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அமரர் லோரன்ஸ் கடந்துவந்த பாதை இலகுவானது அல்ல. மிக நெருக்கடியான காலக்கட்டங்களில், மலையக மக்களுக்காக களத்தில் நின்று, தன்னை அர்ப்பணித்தவர் என்பது நிதர்சனம்.



'மலையகம் சமகால அரசியல் தீர்வு' எனும் நூல் உட்பட பல நூல்களை எழுதியுள்ள அமரர் அந்தனி லோரன்ஸ், தனது மிக ஆரம்பகால கல்வியை தலவாக்கலை ஹொலிரூட் தோட்ட பாடசாலையிலும் க.பொ.த சாதாரண தரத்தை தலவாக்கலை சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தை ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் பயின்ற அவர், தனது பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார்.

கல்லூரி காலத்திலேயே தோழர் என். சண்முகதாசன் தலைமையில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்பு கொண்டு இயங்கியவர்.

70களில் கருத்து முரண்பாடு காரணமாக சண்முகதாசனிடம் பிரிந்து, தோழர் காமினியப்பா கௌரிகாந்தன் தலைமையில் இயங்கிய கிளைக்காற்று இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு 1974 ஆம் ஆண்டு அரசியல் காரணங்களுக்காக சிறை சென்றார்.

77 ஆம் ஆண்டு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடந்த இலங்கை ஆசிரியர் சங்க மாநாட்டில் பி. ஏ. காதரோடும் கௌரிகாந்தனோடும் இணைந்து வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் மழையக தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தனியான தேசிய இனம் என்ற கருத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இணைந்து செயல்பட்டார்.

காதர், தர்மலிங்கம் ஆகியோரோடு மலையக வெகுஜன இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களின் முக்கிய உறுப்பினர்களாகவும் செயல்பட்டார்.

80களில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் இளைஞர் சேவை அலுவலராக இணைந்து, நுவரெலியா மாவட்ட இளைஞர் சேவை அலுவலராக கிட்டத்தட்ட 15 வருடங்கள் அரசாங்க சேவையிலும் கடமையாற்றியிருந்தார்.

80 களில், மலையாக வெகுஜன இயக்கத்தின் வெளியீடான 'விடிவு' என்ற பத்திரிக்கையின் ஆசிரியராகவும் 'யுவிடெப்' என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் (மலையக தொழிலாளர் தகவல் அபிவிருத்தி நிறுவனம்) தலைவராகவும் பிரதான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

1989 ஆம் ஆண்டிலிருந்து மலையக மக்கள் முன்னணியில் இணைந்து செயற்படுவதோடு அதன் ஸ்தாபக உறுப்பினர்களின் ஒருவராகவும் அக்கட்சியின் உப தலைவராக இருந்த தர்மலிங்கம் காலமாகியதன் பின்னர், அவரின் இடத்திற்கு உப தலைவராக நியமிக்கப்பட்டதோடு, பின்பு மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமாகவும் மறைகின்ற பொழுது, மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டார்.

பல்பரிமாண அனுபவங்களை கொண்ட லோரன்ஸ், இனப்பிரச்சினை மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக தாய்லாந்து, ஜேர்மன், மலேசியா போன்ற நாடுகளில் நடந்த கருத்தரங்குகளில், மலையக தமிழ் மக்கள் சார்பாக பங்கு பற்றியுள்ளதோடு அரசியல் தீர்வில் மலையகத் தமிழ் மக்கள் பிரச்சினையை வலியுறுத்தி, பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

மலையகத்தில் நீண்ட இடைவெளிக்கு பிறகு உருவாக்கப்பட்ட தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற அமைப்பின் உருவாக்கத்தில், தனது அயராத பங்களிப்பை வழங்கியதோடு அதன் முதலாவது செயலாளராகவும் இருந்து திறமையாக செயற்பட்டுள்ளார்.

மேலும், மலையக பகுதிகளில் பிரதேச செயலகங்களை அதிகரிக்க வேண்டும் என்பதை ஆரம்ப காலம் தொட்டு, பல்வேறு இடங்களில் குரல் கொடுத்ததோடு இது தொடர்பாக, அமரர் சந்திரசேகரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை தொகுத்து கொடுத்ததற்கும் தன்னுடைய பங்களிப்பை செய்துள்ளார்.

அமரர் லோரன்ஸ் மும்மொழிகளிலும் சரளமாக பேசவும் எழுதவும் கூடியவர். இவருடைய மறைவானது மலையகத்திற்கு மாத்திரமல்லாது சர்வதேச மட்டத்திலும் மலையக மக்கள் முன்னணிக்கும் பாரிய இழப்பாக அமைந்திருக்கிறது.

# “மோடி அரசே, நீதியைக் கொல்லாதே” - திருமாவளவன் டுவீட்



“மோடி அரசே, நீதியைக் கொல்லாதே” என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் பதிவிட்ட டுவிட் இணையத்தில் வைரலாகி வருகின்றது.

இந்திய மல்யுத்த சம்மேளன தலைவரும் பாரதிய ஜனதா கட்சியின் அமைச்சருமான பிரிஜ்பூஷண் சரண்சிங் மீது பாலியல் குற்றச்சாட்டு தெரிவித்த மல்யுத்த வீரர்கள், வீராங்கனைகள் கடந்த ஏப்ரல் 27ம் திகதி முதல் டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற புதிய கட்டிடம் திறப்பு விழாவின் போது மல்யுத்த வீரர், வீராங்கனைகள் பேரணியாக பாராளுமன்றம் நோக்கி செல்ல முயன்ற போது அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் போராட்டம் நடத்திய பகுதியையும் அப்புறப்படுத்தினர்.

இதனிடையே, பாலியல் புகாரில் சிக்கியுள்ள பிரிஜ்பூஷண் மீது நடவடிக்கை எடுக்கப்படாததை கண்டித்து தேசிய சர்வதேச போட்டிகளில் நாட்டிற்காக வென்ற பதங்களை கங்கை நதியில் வீசப்போவதாகவும் மல்யுத்த வீரர் வீராங்கனைகள் நேற்று அறிவித்தனர்.

இந்த நிலையில், நீதிக்காக தொடர்ந்து போராடி வரும் மல்யுத்த வீரர், வீராங்கனைகளுக்கு ஆதரவாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் குரல் கொடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், “காமப்பித்து வன்கொடுமைகளைச் செய்த பா.ஜ.க எம்.பி பிரிஜ் பூஷண் சரண்சிங் -ஐ கைதுசெய்ய வேண்டுமென வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மல்யுத்த வீராங்கனைகள் மற்றும் வீரர்களின் உறுதிமிக்க அறப்போர் வெல்லட்டும். மோடி அரசே, நீதியைக் கொல்லாதே! குற்றஞ்சாட்டப்படும் நபரைப் பாதுகாத்திட முயற்சிக்காதே!” என்று தெரிவித்துள்ளார்.

# பாடசாலை சீருடைக்கு இலவசம்



பாடசாலை சீருடைகளில் வரும் மாணவர்களை அரச பஸ்களில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என தமிழக போக்குவரத்து துறை உத்தரவிட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு கோடை விடுமுறை முடிந்து வரும் 7ஆம் திகதி முதல் பாடசாலை திறக்கப்பட உள்ளன.

இந்நிலையில், பாடசாலை சீருடைகளில் வரும் மாணவர்களை அரச பஸ்களில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என போக்குவத்து துறை உத்தரவிட்டுள்ளது.

கடந்த கல்வியாண்டில் வழங்கப்பட்ட கட்டணமில்லா பஸ்பயண அட்டையை காண்பித்து மாணவர்கள் பயணம் செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சீருடை அணிந்திருந்தாலோ அல்லது அடையாள அட்டைகளை வைத்திருக்கும் மாணவர்களை பஸ்ஸில் இருந்து இறக்கி விடப்பட்டால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போக்குவரத்து துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

நெல்லை

# மாமியாரை ஆண் உடையில் கொலை செய்த மருமகள்



பெண்ணொருவர் ஆண் உடை அணிந்து வந்து தனது மாமியாரைக் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லையைச் சேர்ந்தவர் சண்முகவேல். 64 வயதான இவர் பால் வியாபாரம் செய்து வருகிறார். இவருடைய மனைவியின் பெயர் சீதாலட்சுமி. இவர்களுக்கு மாரியப்பன் என்ற மகன் உள்ளார்.

மாரியப்பனுக்கும் மகாலட்சுமி என்ற பெண்ணுக்கும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். மாரியப்பன் தனது பெற்றோரின் வீட்டிற்கு அருகிலேயே மற்றொரு வீட்டில் மனைவி, குழந்தைகளுடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் மகாலட்சுமி அடிக்கடி தனது மாமியாரின் வீட்டுக்குச் சென்று வந்துள்ள நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் மாமனாரின் வீட்டுக்கு சென்ற மகாலட்சுமி, அங்கிருந்த அலுமாரியைத் திறந்து அதற்குள் இருந்த பணத்தை எடுத்ததாகவும், அதனை பார்த்த மாமியார் சீதாலட்சுமி அவரை கண்டித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து நேற்று முன்தினம் அதிகாலையில் சண்முகவேல் பால் கறப்பதற்காக வெளியே சென்றுள்ள நிலையில் இதனை நோட்டமிட்ட மகாலட்சுமி, ஆண்கள் அணிவதை போன்று நீளக் காட்சட்டை, சட்டை மற்றும் ஹெல்மெட் ஆகியவற்றை அணிந்து மாமியாரின் வீட்டுக்குள் நுழைந்து உறங்கிக்கொண்டிருந்த சீதாலட்சுமியை இரும்பு கம்பியால் சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இதில் அலறி துடித்த அவர் இரத்த வெள்ளத்தில் மயங்கினார். இதையடுத்து சீதாலட்சுமி அணிந்திருந்த 5 பவுன் தாலி சங்கிலியை மகாலட்சுமி பறித்து சென்றுள்ளார்.

இந்நிலையில் வீடு திரும்பிய சண்முகவேல் இரத்த வெள்ளத்தில் மயங்கி கிடந்த சீதாலட்சுமியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து உடனடியாக அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி சீதாலட்சுமி பரிதாபமாக இறந்தார். இதற்கிடையே சண்முகவேலின் வீட்டில் உள்ள கண்காணிப்பு கெமரா பதிவுகளை பொலிஸார் ஆய்வு செய்தபோது அதில், மகாலட்சுமி ஹெல்மெட்டை கழற்றும் காட்சி பதிவாகியிருந்துள்ளது.

இதையடுத்து மகாலட்மியிடம் பொலிஸார் விசாரித்தபோது, தன்னை அவதூறாக பேசியதால் மாமியாரைக் கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார்.

மேலும் நகைக்காக மர்மநபர்கள் மாமியாரை தாக்கியிருக்கலாம் என்று அனைவரையும் நம்ப வைப்பதற்காக இவ்வாறு செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மகாலட்சுமியை கைது செய்தபொலிஸார் , அவரை சிறையில் அடைத்தனர்.

பெரு

# 60 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனம்



பெருவில் உள்ள 131 மாவட்டங்களுக்கு அடுத்த 60 நாட்களுக்கு அவசரநிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புவி வெப்பமாதல் காரணமாக மத்திய பசிபிக் பெருங்கடலில் ஒழுங்கற்ற காலநிலை நிலவி ஏற்படுவது ‘எல்நினோ விளைவு‘ என அழைக்கப்படுகிறது.

இந்நிலையில் பெருவில் ஏற்பட்டுள்ள எல்வினோ விளைவு காரணமாக மிக மோசமான பாதிப்பு ஏற்படும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனை சமாளிக்க தேசிய பேரிடர் மீட்பு மேலாண்மை ஆணையம், சுகாதார அமைச்சகம் உள்ளிட்ட துறைகள் இணைந்து செயல்பட வேண்டும் என அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அதேசமயம் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் மாகாணங்களில் உள்ள 131 மாவட்டங்களில் அடுத்த 60 நாட்களுக்கு அவசர பிரகண நிலை பிறப்பித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

# இறந்த பின்னர் பணம் செலுத்தினால் போதும்



” பீட்சா பிரியர்கள் இறந்த பின்னரும் அதற்கான கட்டணத்தைச் செலுத்தலாம் என்ற வித்தியாசமான சலுகையை நியூசிலாந்தில் உள்ள உணவகமொன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது இச்சலுகை கோரி தங்களது இணையதளம் மூலம் விண்ணப்பிப்பவர்களில் 666 பேர் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

அவ்வாறு தேர்வு செய்யப்படுபவர்களின் இல்லங்களுக்கு உணவக நிறுவனத்தின் வழக்கறிஞர் வருவார் என்றும் கடனுக்கு பெற்ற பீட்சாவிற்கான கட்டணத்தை இறந்த பிறகு செலுத்தலாம் எனவும் அந்த உணவகம் தெரிவித்துள்ளது.

இவ் விளம்பரமானது பீட்சா பிரியர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



# மஞ்சள் படையைப் பாராட்டிய சுந்தர்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஐ.பி.எல் இறுதிப்போட்டியில் வென்றதை தொடர்ந்து அவ் அணியைப் பாராட்டி கூகுளின் சி. இ .ஓ சுந்தர் பிச்சை பதிவிட்ட ட்வீட் வைரலாகி வருகிறது.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி குஜராத் டைட்டன்ஸ் அணியை எதிர்கொண்டது.

மழையின் காரணமாக பல தடைகளுக்கு பின்னர் நடைபெற்ற இப்போட்டியில், சென்னை அணி வென்றது.

இந்நிலையில், பலரும் இறுதிப்போட்டி குறித்தும், சென்னையின் வெற்றிக் குறித்தும் ட்விட்டரில் பதிவிட்டு வருகின்றனர்.

அந்தவகையில் கூகுளின் சி. இ. ஓ சுந்தர் பிச்சையும் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவை வெளியிட்டிருந்தார்.

அதில், “என்ன ஒரு இறுதிப்போட்டி அது! டாடா ஐபிஎல் எப்போதும் போல மிகச்சிறந்த போட்டியாகவே அமைந்தது. சிஎஸ்கேவுக்கு வாழ்த்துக்கள், அடுத்த ஆண்டு குஜராத் அணி வலுவாக திரும்பிவர வாழ்த்துக்கள்” என்று அவர் பதிவிட்டிருந்தார்.

# 58 வருடங்களுக்கு பின்னர் சடலத்தை தோண்டி எடுக்கும் அரசு



அமெரிக்க இராணுவத்தின் மேஜர் ஜெனரலாகப் பதவி வகித்தவர் ஹேரி கிலைன்பெக் பிக்கெட்.

1913 ஆம் ஆண்டு அமெரிக்க கடற்படையில் இணைந்த இவர் இந்தியாவின் டார்ஜிலிங்-க்கு வந்திருந்த போது மாரடைப்பால் உயிரிழந்தார்.

இதனையடுத்து அவரது உடல் 58 ஆண்டுகளுக்கு முன்பு கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது உடலை அமெரிக்காவில் மறு அடக்கம் செய்ய வேண்டும் என குடும்பத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் ஹேரியின் உடல் அமெரிக்காவின் தேசிய கல்லறை தோட்டத்தில் மறு அடக்கம் செய்யப்படும் என அமெரிக்க துணை தூதர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து 58 ஆண்டுகளுக்குப் பின்னர் குறித்த இராணுவ அதிகாரியின் உடல் இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்டு மறு அடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக் குழாமில் மீண்டும் திமுத் கருணாரத்ன



ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமுக்கு டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் திமுத் கருணாரத்ன மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை டுஷ்மந்த சமீரவும் காயத்திலிருந்து குணமடைந்து குழாமில் இடம்பெற்றுள்ளதுடன், மதீஷ பத்திரணவும் குழாமில் இடம்பெற்றதுடன், புதுமுக புறச்சுழற்பந்துவீச்சு சகலதுறைவீரரான டுஷான் ஹேமந்தவும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில் பின்தொடை தசைநார் காயம் காரணமாக குஷல் பெரேரா குழாமில் இடம்பெறாததோடு, நுவனிடு பெர்ணாண்டோ, சஹான் ஆராச்சிகே, டுனித் வெல்லலாகே, பிரமோத் மதுஷன், டில்ஷான் மதுஷங்க ஆகியோரும் குழாமில் இடம்பெற்றிருக்கவில்லை.

குழாம்: டசுன் ஷானக (அணித்தலைவர்), குசல் மெண்டிஸ் (விக்கெட் காப்பாளர்), பதும் நிஸங்க, திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா, சரித் அஸலங்க, சதீர சமரவிக்கிரம, சாமிக கருணாரத்ன, டுஷான் ஹேமந்த, வனிடு ஹஸரங்க, லஹிரு குமார, டுஷ்மந்த சமீர, கசுன் ராஜித, மதீஷ பத்திரண, மகேஷ் தீக்ஷன.

## டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்:

# முதல் நாளில் அநுர ரோஹண முன்னிலை

டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்பானது நேற்று முன்தினம் ஆரம்பித்த நிலையில், முதல் நாளில் அநுர ரோஹண முன்னிலை பெற்றுள்ளார்.

றோயல் கொழும்பு கோல்ப் கழகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 67 புள்ளிகளுடன் றோஹண முதலிடம் பெற்ற நிலையில், இந்தியாவின் உடயன் மனே இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, மூன்றாமிடத்தில் பங்களாதேஷின் ஜமால் ஹொஸைன், சாலித புஷ்பிகா, சானக பெரேரா, 15 வயதான றெஷான் அலகம, கே. பிரபாகரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங் கொங், அவுஸ்திரேலியா, சிங்கப்பூரைச் சேர்ந்த 125க்கும் அதிகமான வீரர்கள் இப்போட்டியில் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து எதிர் அயர்லாந்து:

# ஒற்றை டெஸ்ட் இன்று ஆரம்பிக்கிறது

இங்கிலாந்து, அயர்லாந்து அணிகளுக்கிடையிலான ஒற்றை டெஸ்ட் போட்டியானது லோர்ட்ஸில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்து சார்பாக வேகப்பந்துவீச்சாளர் ஜொஷ் டோஹ் அறிமுகத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இப்போட்டியைப் பொறுத்த வரையில் இங்கிலாந்தின் ஸக் குறொலி, பென் டக்கெட், ஒலி போப், ஜோ றூட், ஹரி ப்ரூக், பென் ஸ்டோக்ஸ், ஜொனி பெயார்ஸ்டோவை அயர்லாந்தின் பந்துவீச்சாளர்கள் எவ்வாறு கட்டுப்படுத்துகிறார்கள் என்பதிலேயே போட்டியின் முடிவு தங்கியுள்ளது. மறுபக்கமாக அயர்லாந்தின் அணித்தலைவர் அன்டி போல்பிரயன், போல் ஸ்டேர்லிங்க், ஹரி டெக்டர், லொர்கன் டக்கர், கேர்ட்டிஸ் கம்பர் உள்ளிட்டர்வர்களிடமிருந்து தொடர்ச்சியான சிறந்த பெறுபேறே இங்கிலாந்துக்கு அழுத்தத்தை வழங்கும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 01 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.